விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச இலவச திருமண சேவை]
021 720 1005
இல.144, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 258 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 18 புதன்கிழமை (03.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள்

### ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு



(முல்லைத்தீவு)

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் நேற்று நண்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## இனப் பிரச்சினையைத் தீர்க்க எந்த எல்லைக்கும் செல்வோம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

நாட்டில் காணப்படுகின்ற இனப் பிரச்சினையைத் தீர்க்க தாம் எந்த எல்லைக்கும் செல்வோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற தெங்கு முக்கோண ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

14ஆம் பக்கம் பார்க்க

### காணாமல்போனவர்களுக்கு நடந்தது என்ன?

# உண்மையைக் கண்டறிய அரசு உறுதி பூண்டுள்ளது

### புதுக்குடியிருப்பில் ஜனாதிபதி அநுர



(புதுக்குடியிருப்பு)

காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது? என்ற உண்மையைக் கண்டறிவதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இனவாத அரசியலுக்கு நாட்டில் இடமில்லை

### ஜனாதிபதி அநுர குமார

(புதுக்குடியிருப்பு)

நாட்டில் இனவாத அரசியல் மீண்டும் தலைதூக்குவதற்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி

15ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா அமர்வில்

## பயங்கரவாதச் சட்டம் தொடர்பில் அதிக கவனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 16வது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான மனித

14ஆம் பக்கம் பார்க்க

### செம்மணியில்

## மேலும் 4 எலும்புக்கூடுகள் அடையாளம்


(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப்புதைகுழியில் புதிதாக மேலும் 4

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொடவின் நூலுக்கு

### பிரித்தானியாவில் தடை




(லண்டன்)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்தகுமார் ஜயதேவ கரன்னாகொடவின் சுயசரிதையின் ஆங்கிலப் பதிப்பை AmazonUK

15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணிப் புதைகுழியில்

## சிறிய, பெரிய மனித எச்சங்கள் அருகருகே அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் ஒரு பெரிய எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் ஒப்பீட்டளவில் சிறிய எலும்புக் கூட்டுத் தொகுதி அருகருகே அடையாளம் காணப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க



(C-267)

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 27 . 10 . 1932

உதிர்வு 31 . 08 . 2025

## அமரர் வேலாயுதர் இராசமணி

(கைதடி மேற்கு)

உடல்நலக் குறைவு காரணமாக 31.08.2025 அன்று அமரத்துவமடைந்த அமரர் வேலாயுதர் இராசமணி அவர்களின் ஆத்மா அமைதியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(3593)

தகவல் : நா.சங்கர் (சுவிஸ்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 04 - 1950



மறைவு 02 - 09 - 2025

## நவரத்தினம் லோகேஸ்வரி

நுங்கயப்புலம் அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் லோகேஸ்வரி நவரத்தினம் அவர்கள் நேற்று 02.09.2025 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் தியாகராஜா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் அப்பாத்துரை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் அமரர் பஞ்சாட்சரம், அமரர் விநாயகமூர்த்தி மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியபாமா, சத்தியரூபன் (பிரதேச செயலகம் - நல்லூர்), சத்தியகுகன் (சிங்கப்பூர்), சத்தியநிதி (ஆசிரியர் - அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நித்தியானந்தம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - சங்கீதம்), வானிலா (ஆசிரியர் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), மலர்செல்வி, சசிதரன் (பிரதேச செயலகம் - தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தவமணிதேவி, பத்மாவதி, தேன்மொழி ஆகியோரின் அன்பு மைத்துனியும் துவாரகா - வைகுந்தன் (லண்டன்), சிந்துரன், சிவாஜன், வித்தகன், நர்த்தனா, கஜானனன், மதுவந்தி, மகிஷா, ரசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அம்ஷிகி, ஆருத்ரா, ஆதிரை ஆகியோரின் அன்பு பாட்டியுமாவார்.

அன்னாரின் சமாதிக் கிரியைகள் இன்று 03.09.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று கொட்டுப் பனை இந்துமயானத்தில் சமாதி வைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

நுங்கயப்புலம், அளவெட்டி மேற்கு.

077 911 6043
077 956 8670

(C-3795)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை - புதுக்குடியிருப்பு

### புதுக்குடியிருப்பு கடைகள், ஒலுமடு கடைகள் மற்றும் திருமுறிகண்டி கடைகளுக்கான நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான கடைகள் நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம் :- 03.09.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 23.09.2025 பிற்பகல் 01.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 24.09.2025 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 02.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 24.09.2025 ஆம் திகதி புதன் கிழமை பி.ப 02.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை உள் கடைகள் | | | | |
| கடை இல 02 | ரூபா. 720,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 6,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 840,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 7,000.00 | ரூபா. 2,000.00 |
| திருமுறிகண்டி கடைகள் | | | | |
| கடை இல 05 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 2,000.00 |
| திருமுறிகண்டி U.N.D.P கடை | ரூபா. 300,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,500.00 | ரூபா. 2,000.00 |
| ஒலுமடு கடைகள் | | | | |
| கடை இல 01 | ரூபா. 450,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 3,750.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 5,000.00 | ரூபா. 2,000.00 |

#### நிபந்தனைகள்

1.விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் **புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள்** நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

2.கேள்விப்படிவம் பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **புதுக்குடியிருப்பு கடை இல, திருமுறிகண்டி கடை இல, ஒலுமடு கடை இல** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **24.09.2025 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்** கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

4.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் (கறுப்புப்பட்டியல்) கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.

5. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

7. சித்திரகக் குத்தகைக்காரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையை செலுத்துதல் வேண்டும்.

8. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள், மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

9. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

10.மேற்குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச்செய்யப்படாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

11.பிரதேசசபை சட்டங்களுக்கு அமைவாக ஒப்பந்தம் தொடர்பாக செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்பட வேண்டும்.

12.கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக் கொள் ளலாம்.

தலைவர், பிராந்தியபெறுகைக்குழு,
புதுக்குடியிருப்புப் பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.

தொலைபேசி இல: 021 229 1023
Email - pkdpsmullai@gmail.com

(C-3791)

03.09.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு மோசடிகள்

## அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை!

(கொழும்பு)

**குறைந்தபட்ச வேலைக்கு அதிக சம்பளம் வழங்குவதாக உறுதியளிக்கும் வேலை மோசடிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு எச்சரித்துள்ளது.**

மோசடி செய்பவர்கள், போலியான விளம்பரங்கள், ஒன்லைன் விளம்பரங்கள் மூலம் பொதுமக்களை குறிவைப்பது அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் பெரும்பாலும் வேலைவாய்ப்பு என்ற பெயரில் பதிவுக் கட்டணம் அல்லது வைப்புத்தொகையை கோருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் மோசடி வலையில் விழுந்தவுடன் குறித்த பணத்தை இழக்க நேரிடும்.

தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தும் அல்லது சில சந்தர்ப்பங்களில், மனித கடத்தலுக்கு பலியாகும் அபாயம் உள்ளது என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு எச்சரித்துள்ளது.

வெளிநாட்டு வாய்ப்புகளுக்காக நிறுவன வலைத்தளங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உள்ளிட்ட அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் முதலாளிகளை சரிபார்க்குமாறு வேலை தேடுபவர்களை வலியுறுத்தியுள்ளது.

முறையான வேலைகளுக்கு முன்கூட்டியே பணம் செலுத்துதல் அல்லது வைப்புத் தொகை தேவையில்லை என்று நிறுவனம் வலியுறுத்தியது.

இதற்கிடையில் இது போன்ற மோசடிகளை அடையாளம் காண்பது மற்றும் ஒன்லைனில் பாதுகாப்பாக இருப்பது குறித்து குடிமக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக சமூக ஊடக தளங்களில் விழிப்புணர்வு பிரசாரத்தையும் அக்குழு தொடங்கியுள்ளது. (நி)

## இத்தாலியின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்



இத்தாலியின் வெளிவிவகார பிரதி அமைச்சர் மரியா ட்ரிபோடி இன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த 10 வருட காலப் பகுதியில் முதன் முறையாக இத்தாலியில் இருந்து அதி உயர் மட்ட அதிகாரி ஒருவர் இலங்கைக்கு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## இலஞ்சம் பெற்றதற்காக 49 பேர் கைது!

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டுக்காக மொத்தம் 49 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த கால கட்டத்தில் மொத்தம் 3,937 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொலிஸார் ஆவார்.

நீதி அமைச்சகம், சுகாதார அமைச்சகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் மாவட்ட செயலகங்கள் உட்பட பல அரசு நிறுவனங்களிலிருந்தும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக ஆணையகம் மேலும் குறிப்பிட்டது.

மேலும் இந்தக் காலகட்டத்தில், இலஞ்சம் பெற்றதற்காக 27 நபர்கள் நீதிமன்றங்களால் தண்டனை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## நிலுவையிலுள்ள வழக்குகள் டிசம்பருக்குள் தீர்க்கப்பட வேண்டும்

### நீதிச் சேவைகள் ஆணைக்குழு உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளையும் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் தீர்க்க வேண்டும் என நீதிச் சேவைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு அனைத்து மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள் என அனைவருக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தரவுகள் சேகரிக்கப்பட்ட நிலையில், அவற்றின் தீர்வுகளை தாமதமின்றி வழங்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள், அந்தந்த நீதிமன்றங்களுக்கு நிர்வாக ரீதியாக பொறுப்பாக இருப்பவர்கள் தங்கள் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை அகற்றுவதற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மேலும் இவ் விடயத்தில் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என அனைத்து நீதிபதிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிலுவையிலுள்ள வழக்குகளை விசாரிப்பதும் தீர்ப்பதும் அனைத்து நீதிமன்ற ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப் பொறுப்பாகும். மேலும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறும் எந்தவொரு ஊழியருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (நி)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் இந்த வாரத்திற்குள் வெளியிடப்படும்

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த வாரத்திற்குள் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த விடயத்தை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சை இம்முறை 2,787 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

அந்தவகையில், இந்த வருடம் 231,638 சிங்கள மொழி விண்ணப்பதாரர்கள் மற்றும் 76,313 தமிழ் மொழி விண்ணப்பதாரர்கள் உட்பட மொத்தம் 307,959 விண்ணப்பதாரர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1951



மறைவு 01 . 09 . 2025

**கதிரன் ஆறுமுகம்**

(அருண் காட்வெயர் உரிமையாளர்)

வல்லியாவத்தை கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும் அறிவாலயம் கரணவாய் மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.கதிரன் ஆறுமுகம் அவர்கள் 01.09.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சீனியன் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லப்பாக்கியத்தின் பாசமிகு கணவரும், அமரர்.அருண் மற்றும் கிருஷ்ணவேணி, பொவிதா (பிரான்ஸ்), காசினி, யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மாயவன் அமிர்தசாகரன் (பிரான்ஸ்), முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷானி, பரிஷா, வவின்ஷா, ஆதுஷன், ஆதுஷா, ஆருஷி, அஸ்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 03.09.2025 இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11 மணியளவில் வல்வை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அறிவாலயம், கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
077 756 0825

(C-3789)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமிதம் கொள்ளும் மன்னார்!

# தேசிய உதைபந்தாட்ட அணியில் மன்னார் வீரர்கள் இருவர் தெரிவு




இலங்கை 16 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட தேசிய அணியில் மாணவர்களை உள்வாங்குவதற்காக நடைபெற்ற தேர்வில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகி மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான செல்வன் கே.கெஸ்ரோன் , செல்வன் என்.ஜெனிஸ்ரன் ஆகியோர் குறித்த தெரிவுப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடி திறமையை வெளிப்படுத்திய தன் அடிப்படையில் தேசிய அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு மாணவர்களும் கலந்து கொள்ளும் முதலாவது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியானது சீனாவில் இம் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இப்போட்டி " U16 Tainyu Liufang Cup – 2025" இற்கான போட்டியாகும். இதற்கான மேலதிக பயிற்சிகள் இம் மாதம் 4 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது. (3-285)

## மத்தியஸ்தர்களை அனுப்புவது தொடர்பில் கரப்பந்தாட்ட சங்கத்தின் அறிவிப்பு

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறுகின்ற கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்பு வது தொடர்பில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் புதிய அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறுகின்ற கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்புவதாயின் கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடைபெறுகின்ற போட்டிகளுக்கு மாத்திரமே நடுவர்களை அனுப்ப வேண்டும்.

அதாவது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையி லான போட்டிகள், உள்ளூர் போட்டிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நடத்துகின்ற போட்டிகள் ஆகியவற்றிற்கும் மத்திய ஸ்தர்களை அனுப்ப முடியும்

அனுமதியின்றி நடைபெறுகின்ற போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்பும் பட்சத்தில் ஏற்படும் இடையூறுகளுக்கும் அசம்பாவிதங்களுக் கும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கமே பதில் கூற வேண்டி நேரிடும்.

இதனால் அனுமதியின்றி நடைபெறுகின்ற போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்பும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# சொந்த சாதனையை முறியடித்த வீராங்கனை



இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 49ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் வட மாகாணத்தைச் சேர்ந்த என்.தக்ஷிதா தன்னுடைய சொந்த சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

வட மாகாணத்தைச் சேர்ந்த என்.தக்ஷிதா, பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3.52 மீற்றர் தூரம் தாண்டி 2024 ஆம் ஆண்டு 3.51 மீற்றர் தூரம் தாண்டிய தனது சொந்த சாதனையை முறியடித்தார். (3)

## லீக்ஸ் கிண்ண இறுதிப் போட்டி

# மெஸ்ஸியின் அணி படுதோல்வி போர்க்களமாக மாறிய மைதானம்




லூமென் ஃபீல்டு மைதானத்தில் நடந்த லீக்ஸ் கப் கால்பந்து இறுதிப் போட்டியில் இன்டர் மியாமி மற்றும் சியாட்டில் சௌண்டர்ஸ் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் சியாட்டில் வீரர் ஒஸாசி டி ரொஸாரியோ கோல் அடித்தார். அதற்கு பதில் கோல் அடிக்க இன்டர் மியாமி வீரர்கள் தடுமாறினர்.

இரண்டாம் பாதியிலும் சியாட்டில் வீரர்கள் சிறப்பாக செயற்பட, அலெக்ஸ் ரோல்டன் மற்றும் பால் ரோத்ராக் ஆகியோர் மூலம் 2 கோல்கள் கிடைத்தன.

மெஸ்ஸி இருந்தும் கடைசி வரை இன்டர் மியாமியால் ஒரு கோல் கூட அடிக்க முடியாததால், 0-3 என்ற கணக்கில் படுதோல்வியடைந்தது. இதனால் மெஸ்ஸியின் ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர்.

இப்போட்டி முடிந்த பின்னர் இரு அணி வீரர்களுக்கும் இடையே மைதானத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது வாக்குவாதம் முற்றியதால் இரு அணி வீரர்களும் கடுமையாக தாக்கிக்கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் கொண்டாட்டங்கள் நடுவில் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

# ரி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் ரசீத் கான் வரலாற்று சாதனை




ஷார்ஜாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை ரசீத் கான் படைத்தார்.

இதற்கு முன்பு நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுதியை 165 விக்கெட்டுகள் எடுத்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது 166 விக்கெட்டுகள் வீழ்த்தி ரசீத் கான் புதிய சாதனை படைத்துள்ளார்.


சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பந்துவீச்சாளர்களில் 150 விக்கெட்டுகளுடன் இஸ் சோதி 3ஆம் இடமும் 149 விக்கெட்டுகளுடன் ஷாகிப் அல் ஹசன் 4ஆம் இடமும் 142 விக்கெட்டுகளுடன் முஸ்தபிசுர் ரகுமான் 5ஆம் இடத்திலும் உள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 ஆம் ஆண்டு

# நினைவு தின அழைப்பு

மலர்வு
29 . 06 . 1933



உதிர்வு
14 . 09 . 2024

கடந்த 14.09.2024 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

## அமரர் கதிரன் முருகேசு

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் 03.09.2025 இன்று புதன்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்"


வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

(5310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் ஐவர் நிர்வாக சேவை தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

31.07.2025 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைவாக வடக்கில் உள்ள பின்வரும் கல்வி அதி காரிகள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

என்.கந்ததாசன், எஸ்.தர்மசீலன், திருமதி கே.பிரதீபா, சி. தேவகுமாரன், ஆர்.ஜே அன்ரொனி ஆகியோரே இவ்வாறு கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர். (8)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ கனகரத்தினம் மத் திய மகா வித்தியாலய 2025 ஆம் ஆண்டுக்கான நிறுவுநர் தினம் மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் இங்கிலாந்து பழைய மாணவர் சங்கத் தலைவரும் பிரதம பொலிஸ் பரிசோதகருமாகிய துவன் இந்திக்கம், கௌரவ விருந்தினராக பழைய மாணவனும் இங்கிலாந்து பழைய மாணவர் சங்கத் தலைவருமான ப. ஜெயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் நிகழ்வின் நினைவுப் பேருரையினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் வழங்கவுள்ளர். (3)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ மயிலணி சைவ மகா வித்தியாலய ஆங்கில செயற்பாட்டு அறை திறப்பு விழா இன்று புதன்கிமை காலை 9 மணியளவில் பாடசாலை முதல்வர் பா.பார்த்தீபன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுன்னாகம் மக்கள் ஒன்றிய பொருளாளர் சி. ஆனந்தகிருஷ்ணா, சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோ. ராமநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (3)

## இலவச யோகக்கலை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகக் கலை பயிற்சி நெறியின் புதிய பிரிவிற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 13.09. 2025 தொடக்கம் 3 மாத காலப்பகுதி வரை வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களில் நடை பெறவுள்ளது. காலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவம் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம். அத்துடன் விண்ணப்பப்படிவத்தினை பெற்று பதிவினை மேற்கொள்ளாதவர்களும் பயிற்சியின் ஆரம்ப தினத்தில் (13.09.2025) பயிற்சி நடைபெறும் இடத்திற்கு காலை 6 மணிக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து வளவாளரிடம் பதிவினை மேற்கொண்டு பயிற்சியில் இணைந்து கொள்ள முடி யும் என அறிவித்துள்ளனர்.

## மண்ணியா குளத்தில் பற்றி எரிந்த பனங்கூடல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தின் மண்ணியாகுளம் குடியேற்றப் பிரதேசத்தில் உள்ள தனியார் காணியொன்றில் அத்துமீறி நுழைந்தவர்கள் அங்கிருந்த பனைமரங்களுக்கு தீ வைத்து எரித்து அழித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மண்ணியாகுளத்தில் பெண்ணொருவருக்கு சொந்தமான 24 ஏக்கர் வயலும், பனையும் சேர்ந்த காணிக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் அங்கிருந்த நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த பனங்கூடல்களுக்கு தீ வைத்து அழித்ததுடன், சில பனைமரங்களை முற்றாக வெட்டியும் அழித்துள்ளனர்.

இது தொடர்பில் காணி உரிமையாளருக்கு ஊர் மக்கள் வழங்கிய தகவலையடுத்து பனை அபிவிருத்தி சபைக்கும் தெரியப்படுத்தப்பட்டது. ஆனாலும், அவர்கள் தங்களுக்கு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க எந்த அதிகாரமுமில்லை எனக் கையை விரித்ததுடன், பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கு மாறும் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டும் இதுவரை பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



வடமாகாணத்தில் அழிந்து வரும் பனை மரங்களை பாதுகாக்க சம்பந்தப்பட்ட தரப்புகள் மௌனமாக இருப்பது தொடர்பில் அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (8-33-104)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 04.08.2025 திங்கட்கிழமை
அன்று சிவபதம் அடைந்த எமது அன்பு செல்வம்

## அமரர். கந்தசாமி புவிதரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் 03.04.2025 இன்று புதன்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் சாரையடி வீரபத்திரர் கோவில் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும் தொடர்ந்து நாளை 04.09.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண கிரியை நடைபெற்று தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

வீரபத்திரர் கோவிலடி
சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி. (1508)

தகவல்
குடும்பத்தினர்
077 500 2162

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கரையொதுங்கும் இந்திய மருத்துவக் கழிவுகள்!

## எச்சரிக்கும் பேராசிரியர் விமலசூரிய

**(கொழும்பு)**

**இலங்கை கடற்கரையில் அண்மைக்காலமாக இந்தியாவின் மருத்துவ கழிவுகள் அதிகமாக கரையொதுங்குவதாக ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்ற தகவமைப்புத் தள ஆலோசகர் பேராசிரியர் டபிள்யூ.எம். விமலசூரிய தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் மெட்ராஸ் பகுதிகளிலே அதிகமான வைத்தியசாலைகளின் மருத்துவ கழிவுகள் கடலில் சூட்சுமமாக விடப்படுகிறது.

இது பல காலமாக மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய நிலையில் குறித்த கழிவுகள் அதிகமாக வெளியேற்றப்படுவதை எம்மால் உணரக் கூடியதாக இருக்கிறது.

கடலில் ஏற்படும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி காற்றுகளால் மன்னார் தொடக்கம் அம்பாந்தோட்டை வரை உள்ள கடற்கரைகளில் இந்த மருத்துவ கழிவுகள் கரையொதுங்குகின்றன.

இது தொடர்பில் இலங்கை சூழலியலாளர்களும் பரிசோதனைகளை நடத்தியுள்ளனர்.

குறித்த கழிவுகளில் ஊசிகளும் காணப்படுகிறது. பல கழிவுகள் கடல் மண்ணில் புதையுண்டு போவதால் வெளியில் தெரிவதில்லை.

இவற்றால் ஏற்படும் ஆபத்துக்களை அறுதியிட்டு கூற முடியாது. இது பலவாறான ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடும்.

இந்திய சமுத்திரத்தை அண்டியுள்ள நாடுகள் சர்வதேச சூழல் பாதுகாப்பு சட்டங்களை கடைபிடிப்பதில்லை. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் எமது நாடு சிவப்பு பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளே இதற்கான காரணமாகும்." என தெரிவித்தார். (நி)

# இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு 500 மில்லியன் ரூபா இலகு கடன்

## அரச வங்கிகளுடன் விவசாய அமைச்சு உடன்படிக்கை

(கொழும்பு)

விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைய தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்க்கும் வகையில், 500 மில்லியன் ரூபா இலகு கடன் வழங்கப் படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கை விவசாய மற்றும் கால்நடைகள் அமைச்சுக்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுக்குமிடையில் கைச்சாத்திடப் பட்டது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த விவசாய மற்றும் கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டி.பி விக்கிரமசிங்க இந்த வேலைத் திட்டமானது விவசாயத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்.


தொழில் முயற்சியாளர்கள் தமது அடுத்த கட்டத்திற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளும் போது நிதி நெருக்கடிகள் ஏற்படலாம்.

இதற்குத் தேவையான நிதி ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு இந்த இலகு கடன் திட்டம் மூலம் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கடன் திட்டத்தில் நூற்றுக்கு நான்கு வீத வட்டி நிர்வாக செலவுக்காக மாத்திரம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## மரண அறிவித்தல்

மண்ணில்
06
08
1941



விண்ணில்
29
08
2025

### அமரர். திருமதி பரமேஸ்வரி கனகசபாபதி

மலேசியாவை பிறப்பிடமாகவும், அல்வாய் தெற்கு மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.திருமதி பரமேஸ்வரி கனகசபாபதி அவர்கள் **29.08.2025** வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கோணப்பர் கதிர்கேசு செல்லாச்சி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அமரர்.பெரியதம்பி கனகசபாபதி (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்) அவர்களின் பாசமிகு மனைவியும், பிறேமளா அவர்களின் அன்புத் தாயாரும், குகன் (Scychells) அவர்களின் அன்பு மாமியாரும், அக்வுனா (BIG_M / TAN Engineers Pvt Ltd-Colombo) அவர்களின் பேத்தியும், காலஞ்சென்றவர்களான அமரர்.இராஜரட்ணம் (Malaysia), அமரர்.இராசம்மாவேலுப்பிள்ளை (Alvai), அமரர்.குலசிங்கம் (Malaysia), அமரர்.நவரட்ணம் (Malaysia), அமரர். இராஜசிங்கம் (Malaysia), அமரர்.நடராஜா (Singapore), அமரர்.பரமசிவம் (Malaysia), அமரர்.சபாரட்ணம் (Malaysia) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்.இரத்தினசபாபதி (Neerveli), அமிர்தலிங்கம் (Neerveli), சத்தியலக்ஷ்மி கோணேஸ்வரன் (Neerveli) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **04.09.2025** நாளை வியாழக்கிழமை காலை **9.00** மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பகல் **12.00** மணியளவில் கிரிகைகள் நடைபெற்று பிற்பகல் **3.00** மணியளவில் தகனத்திற்காக அன்னாரின் பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

(C-265)

தகவல்: குடும்பத்தினர் **0112361591 / 0754105270**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 84/2 கனகரத்தினம் வீதி, வட்டாரம்- 09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09. கனகரத்தினம் வீதியிலுள்ள இல 84/2 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் விநாசித்தம்பி பெண் இராஜேஸ்வரி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை கதிரவேலு சந்திரராசா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7510/24.5.1947ஆம் இலக்க உறுதியால் கணபதியார் கதிரவேலுவும் பெண் சின்னத்தங்கமும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுச் சொந்தமும் உரிந்துமுடையவரானார்.

பொன்னையா சின்னத்தம்பி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட13043/04.06.1969ஆம் இலக்க உறுதியால் குறித்த கதிரவேலு சந்திரராசா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குபடும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை பொன்னையா சின்னத்தம்பி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில நிறைவேற்றப்பட்ட 3962/07.05.1969 ஆம் இலக்க உறுதியால் ஆறுமுகம் கந்தப்பு கைம்பெண் ஆச்சிமுத்து ஆகியவரிடமிருந்து அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சொக்கலிங்கம் வினாசித்தம்பி மகள் மனோன்மணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 25/30.09.1974ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னையா சின்னத்தம்பியும் பெண் நாகேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார் .

பஞ்சலிங்கம் சங்கர் பெண் தங்கராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1653/ 15.09.1997 ஆம் இலக்க உறுதியால் குறித்த வினாசித்தம்பி மகள் மனோன்மணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

வினாசித்தம்பி பாலச்சந்திரனும் பெண் புவனேஸ்வரி பாலச்சந்திரனும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு V.T சிவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3565/ 30.06.2014 ஆம் இலக்க உறுதியால் குறித்த பஞ்சலிங்கம் சங்கரும் பெண் தங்கராணியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் : "வட்டுவத்தை"
இறை: வட்டுக்கோட்டை மேற்கு
வீஸ்தீரணம்: நில.பர 3 குளி 13.53
எல்லைகள்: கிழக்கு, வடக்கு- ஒழுங்கை மேற்கு- உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களால் 15.04.2013ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2261ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட மிகுதி ஆதனம் தெற்கு- இராசரத்தினம் பெண்மீனலோனிக்குரிய ஆதனம்

குறித்த வினாசித்தம்பி பாலச்சந்திரனும் பெண் புவனேஸ்வரி பாலச்சந்திரனும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வினாசித்தம்பி பாலச்சந்திரனும் பெண் புவனேஸ்வரி பாலச்சந்திரனும் ஆகியவர்களுக்கு பெயரமாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(C-3788)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# உக்ரைன் - ரஷ்ய போருக்கு மேற்கத்திய நாடுகள் தான் காரணம்

## புடின் பகிரங்கம்




(மொஸ்கோ)
உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதலுக்கு மேற்கத்திய நாடுகள்தான் காரணம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

சீனாவின் தியான்ஜின் நகரில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் உக்ரைனை நேட்டோ அமைப்பில் இணைக்க மேற்கு நாடுகள் தொடர்ந்து முயற்சிப்பது உக்ரைன் மோதலுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.


நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியபடி, இது ரஷ்யாவின் பாது காப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாக அமைகிறது.

2014ஆம் ஆண்டு உக்ரைனில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு, மேற்கத்திய நாடுகளின் தூண்டுதலின் பேரில் நடந்தது" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஆயிர...
# உயிர...

➤ சூடானி...

➤ ஒரு கிராம...



மேற்கு ஆபிரிக்க நாடான சூடானில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டு, இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையிலேயே இந்த நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

சூடான் விடுதலை இயக்கம் தங்கள்

கட்டுப்...
மலையி...
கடந்த சி...
வருகிற...
பாதிக்க...
ரென ...
டது.
இதில...
இருக்கி...
உயிர்பி...

தாக புடி...
பாராட்டி...
மேலு...
தொடர்...
மூலோ...
என்றும்...
உக்...
கொண்...
ஒப்பந்த...
இப்போ...
றுள்ளா...
கடந்...

## ஆப்கான் நிலநடுக்கம்!

# உலக நாடுகளிடம் உதவி கோரும் தலிபான்



(காபூல்)
ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கங்களில் ஒன்றில் 800இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

மேலும், இந்த அனர்த்தத்தில் குறைந்தது 2,800 பேர் காய மடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.


கரடுமுரடான மலைப்பாங்கான நிலப்பரப்பு மற்றும் வானிலை நிலைமை காரணமாக மீட்புப் பணியாளர்கள் தொலைதூரப் பகுதிகளை அடைய சிரமப்பட்டனர்.

இந்தப் பேரழிவு, போரினால் பாதிக்கப்பட்ட தலிபான் நிர்வாகத்தினை மேலும் நெருக்கடியில் தள்ளியுள்ளது.

ஏற்கனவே வெளிநாட்டு உதவியில் வீழ்ச்சியால் போராடி வரும் ஆப்கானிஸ்தான், அண்டை நாடுகளால் இலட்சக்கணக்கான ஆப்கானியர்கள் நாடு கடத்தப்படுதல் தொடர்பான பிரச்சினைகளையும் சந்தித்து வருகின்றது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு உதவ ஆப்கானிஸ்தானில் ஐ.நா.வின் பணி தயாராகி வருவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் கிழக்குப் பகுதியில் 1,000 பேரைக் கொன்ற 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் தலிபான் அரசாங்கம் எதிர்கொண்ட முதல் பெரிய இயற்கை பேரழிவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)



## அமெரிக்க அழுத்தங்களுக்கு மத்தியில்

# ஜி ஜின் பிங் - புடின் சந்திப்பு

(பீஜிங்)
அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு மத்தியில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

சீன நகரமான தியான்ஜினில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் இருவரும் கலந்து கொண்டனர்.

இரண்டாம் உலகப் போரின் 80ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் பீஜிங்கில் ஒரு பிரமாண்டமான சீன இராணுவ அணி வகுப்புக்கு முந்தைய



நாளிலும் இந்த பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன.


இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் "நல்ல நிலையில்" இருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரத்திற்கு மேற்பட்டோரின் ...ரைப் பறித்த நிலச்சரிவு!

## ...னில் பெரும் துயர்

### ...ராமத்தில் ஒருவர் மட்டும் உயிர்பிழைத்த அதிசயம்



(கர்டோம்)

**மேற்கு சூடானில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வந்த நிலையில், நேற்று முன்தினம் மர்ரா மலை பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவில் ஒரு கிராமமே தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன் 1000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

...கட்டுப்பாட்டில் வைத்துள்ள மர்ரா மலையில் உள்ள டார்பர் என்ற பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இந்த பகுதியில் திடீரென பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது.

இதில் சிக்கி, 1000 பேர் பலியாகி இருக்கின்றனர். ஒரே ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்துள்ளார். இந்த தகவலை சூடான் விடுதலை இயக்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஒரு கிராமமே முற்றிலும் தரைமட்டமாகிவிட்டதாக சூடான் விடுதலை இயக்கத்தை முன்னின்று நடத்தி வரும் அப்டேல் வாஹித் முகமது நூர் அறிவித்துள்ளார். (நி)




---

...தாக புடின் இந்தச் சந்திப்பின் போது ...பாராட்டினார்.

மேலும், அவர்களின் "நெருக்கமான தொடர்பு ரஷ்ய - சீன உறவுகளின் மூலோபாய தன்மையை பிரதிபலிக்கிறது" என்றும் கூறினார்.

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்ய தலைவருடனான ஒப்பந்தம் ட்ரம்பிற்கு எட்டாத நிலையில், ஜி இப்போது பீஜிங்கில் புடினை வரவேற்றுள்ளார்.

கடந்த திங்களன்று நடந்த உச்சி



மாநாட்டின் போது ஜி மற்றும் புடின் மேற்கத்திய அரசாங்கங்களை விமர்சித்தனர்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் சீனாவில் ஜப்பானியர்கள் சரணடைந்த 80ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், சீனாவின் மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பை ஜி ஜின்பிங் இன்று புதன்கிழமை நடத்த உள்ளார்.

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக மட்டுமல்லாமல், ஒரு இராஜதந்திர ரீதியாக பீஜிங்கின் சக்தியை சர்வதேச அரங்கில் முன்வைக்க ஜி ஜின்பிங் முயற்சிக்கும் நேரத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## உடல் ஆரோக்கியம் உண்டாகும்!



**சிம்மம்: கிரகநிலை** - இராசியில் சூரியன், புதன், கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் சனி, இராகு - லாப ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

15.09.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் இராசிக்கு மாறுகிறார். 16.09.2025 அன்று இராசியில் இருந்து சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரடியாக செய்யும் குணமுடைய சிம்ம இராசியினரே! இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.


அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம்.

குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். பெண்களுக்கு உதவி கேட்டு உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். திடீர் செலவு உண்டாகலாம்.

அரசியல்வாதிகள் சகாக்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். கட்சித் தலைமையின் ஆதரவு கிட்டும். கட்சி மேல்மட்டத்தால் அலைக்கழிக்கப்படுவர்.




கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதைக்கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும். உங்களது கலைத்திறன் வளரும். மாணவர்கள் சக மாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. கல்வியில் அதிக கவனம் தேவை.

**மகம்:** இந்த மாதம் வீண் மனக் கவலையை உண்டாக்கும். எதிர்பாராத செலவு ஏற்படும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். பணவரவு இருக்கும். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும்.

**பூரம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும்.

தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை.

பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும்.

அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது.


**பரிகாரம்:** தினமும் சூரிய நமஸ்காரம் செய்து சிவனை வணங்க பிரச்சினைகள் குறையும். காரிய வெற்றி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 9, 10

**அதிர்ஷ்ட தினங்கள்:** 2, 3, 29, 30

## மரியாதையும் அந்தஸ்தும் உயரும்!



**கன்னி: கிரகநிலை** - இராசியில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி, இராகு - தொழில் ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் இராசிக்கு மாறுகிறார். 14.09.2025 அன்று இராசியில் இருந்து செவ்வாய் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சூரியன் இராசிக்கு மாறுகிறார். 29.09.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி இராசியினரே! இந்த மாதம் எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும்.

முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும் போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது.


பணவரத்து இருக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேல் அதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.

குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும்.

பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள்.

பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும். அரசியல்வாதிகள் கோஷ்டி சண்டையிலிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது.

சகாக்களுடன் உரிமையாகப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். எனினும் கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப் படுவீர்கள். கலைத்துறையினர் மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர். பழைய நிறுவனத்தில் இருந்து புதிய வாய்ப்பு தேடி வரும். சம்பள விடயத்தில் கறாராக இருப்பது அவசியம்.




மாணவர்கள், சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. பாடங்கள் எளிமையாக தோன்றும்.

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். வாக்கு வன்மையால் அனுகூலம் உண்டாகும்.

எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது. பணம் சார்ந்த கஷ்டங்கள் குறையும். காரிய வெற்றியும், நன்மையும் உண்டாகும்.

**அஸ்தம்:** இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.

சுய நம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:** இந்த மாதம் மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கப் பெறலாம்.

தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும்.

எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கப் பெறும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** கிருஷ்ண பரமாத்மாவை வணங்க கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12

**அதிர்ஷ்ட தினங்கள்:** 4, 5, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளையில் விதை தென்னந்தோட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேச செயலர் பிரிவின் தர்மக்கேணி பகுதியில் விதை தென்னந்தோட்டத்தை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு தென்னை முக்கோண வலயத்தின் மேம்பாட்டுக்காக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஆகியன இணைந்து இதனை நிறுவியுள்ளன.

சர்வதேச தென்னை தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி கொண்டாடப்படுகிற நிலையில், சர்வதேச தென்னை தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இது நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கே.வி. சமந்த வித்யாரத்ன, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஸ்ரீபவானந்தராசா, க.இளங்குமரன் மற்றும் துறைசார்ந்த திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (8)


# மன்னார் பிரதேச செயலர் கடமைகளைப் பொறுப்பேற்பு



(மன்னார்)

மன்னார் நகர புதிய பிரதேச செயலாளராக கே.காந்தீபன் நியமிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

மன்னார் நகர பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட கே.காந்தீபன் 2012 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவாகி 2013 தொடக்கம் 2017 வரை கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள உதவி பணிப்பாளராகவும், 2017 தொடக்கம் 2022 வரை முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளராகவும் 2022 தொடக்கம் 2025 வரை பதுளை உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும் கடமையாற்றிய நிலையில், மன்னார் பிரதேச செயலாளராக கடமையாற்றிய கே.பிரதீப் உதவி மாவட்ட செயலாளராக பதவி உயர்வு பெற்ற நிலையில், மன்னார் நகர பிரதேச செயலாளராக கே.காந்தீபன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)



வரலாற்று சிறப்புமிக்க கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்:யதுபாஸ்கரன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 190 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 100 | 150 |
| தக்காளி | 160 | 250 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 200 | 200 |
| கோவா | 240 | 300 | 200 | 300 |
| கரட் | 400 | 450 | 330 | 400 |
| பூசணி | 100 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 150 | 80 | 120 |
| வாழைக்காய் | 120 | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 150-300 | 300 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 500 | 400 | 280 | 350 |
| வெண்டக்காய் | 120 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 200 | 230 | 250 |
| லீக்ஸ் | 200 | 250 | 150 | 200 |
| பீற்றூட் | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 300 | 230 | 320 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 320 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 40-100 | 100 | 90 | 100 |
| தேசிக்காய் | 300 | 500 | 550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | 700 | 600 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 80 | 250 |

# இராசிபலன்

03.09.2025
ஆவணி 18, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.38 மணிவரை

பூராடம் முன்னிரவு 10.21 மணிவரை
சுப நேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

பரிவர்த்தன ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்:ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.

**கடகம்**
மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**துலாம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்**
தொழில்ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
கேட்ட இடத்தில் உதவி கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு கூடும், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**
சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்**
பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், பயணங்களால் சந்தோசமடைவீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**
ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மீனம்**
செய்தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

பெருமைக்காக எதையும் செய்யாதே உன் மனநிறைவுக்காக பிடித்ததை பெருமையோடு செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசர் நாய்க்கடியும் அதன் விபரீதமும்– அவதானம் மக்களே!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இழப்புக்களை சாதாரணமாக நாம் எதிர்கொண்ட நாட்களையும் தாண்டி எதிர்பாராத விதமாகவும் அலட்சியமாகவும் நாம் இருந்து கொள்வதனால் எமது உயிரை நாம் அநாவசியமாக இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை விசர்நாய்க்கடி ஏற்படுத்தி விடுகின்றது. எமது நாட்டில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களைத் தவிர்த்து தெருநாய்களும் உலாவருவது மக்களுக்கு பலவிதமான அசௌகரியங்களை ஏற்படுத்தியும் விடுகின்றது. கட்டாக்காலி நாய்கள் நோய்த்தொற்று உள்ள நாய்களுடன் தொடுகையிலிருப்பதனால் அந்நோய்க்கிருமிகள் இந்த நாய்களிலும் தொற்றாகி இறுதியில் மனித உயிரைக் காவுகொள்கின்றன. என்ன ஏது என அறிய முன்பே நோய் முற்றி உயிரிழப்பு சடுதியாகி விடுகின்றது.

**நாய்களின் பெருக்கம்**

தற்போதெல்லாம் வீட்டுக்கு 2 மற்றும் 3 என நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. பொழுதுபோக்குக்காக செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களுக்கு தீனி போடுவதே பெரிய வேலையாகிவிடும். அதனையும் தாண்டி நாய்களை வீட்டு பாதுகாப்புக்காக வளர்ப்பதும் அதிகம். களவு அதிகமாகியிருக்கும் இந்நாட்களில் தமது பாதுகாப்பிற்காக நாய்களை வீட்டில் வளர்ப்பதால் முன்னெச்சரிக்கையாகவும் ஓரளவு பாதுகாப்பையும் உணரத் தலைப்பட்டாலும் அவற்றை முறையாக பராமரிக்க வேண்டும் என்பது நியதியாகும். உயிருள்ள ஜீவன்களை நாம் துன்புறுத்தலாகாது. உணவும் வேளாவேளைக்கு கொடுக்கவும் வேண்டும்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய் மற்றும் வளர்ப்பு மிருகங்களினால் மனிதருக்கு காயங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் விசர்நோய் பரவும் ஆபத்து இருந்தால் அதற்கு நாமே பொறுப்பேற்க வேண்டும். கட்டாக்காலி நாய்கள் குறிப்பாக வீதிகளில் தற்போது அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அவற்றுக்கு எந்தவித கட்டுப்பாட்டு முறைகளும் பிரயோகிக்கப்படாத நிலையில் பலர் அவற்றுக்கு முறையாக உணவளித்து அவற்றின் இனப்பெருக்கத்திற்கு உதவுகின்றனர்.

குறிப்பாக வீட்டிலுள்ள உணவு மீதிகளை அல்லது உணவுக் கழிவுகளை சொப்பிங் பைகளில் கொண்டு சென்று வீதியோரம் வீசிவிட்டு செல்லும் கலாச்சாரத்திலிருந்து மக்களை மாற்றுதல் அவசியம். இந்த உணவுக்கழிவுகள் கொண்ட பைகளை நாய்கள் பிய்த்தெடுத்து வீதியெங்கும் அதனை பரவவிடுகின்றதனை தினமும் நாம் அவதானிக்க முடிகின்றது. முறையாக அந்தக் கழிவுகளை அகற்றுவதற்கான பொறிமுறை நகரப் பகுதிகளிலும் கிராமப்பகுதிகளிலும் இல்லாதிருப்பதே இதற்கு காரணம். அலட்சியப்போக்கு இவற்றை மேலும் விபரீதத்துக்குள்ளாக்கி விடுகின்றது.


**விசர்நாய்க்கடியும் நீர் வெறுப்பு நோயும்**

நாய்கள் பூனைகள் என வளர்ப்பு பிராணிகளை முறையாக நோய்த் தடுப்பூசிகள் ஏற்றாமல் வளர்ப்பது ஆபத்து நிறைந்தது. இவை வீட்டை விட்டு வெளியே செல்பவையானால் இன்னும் கவனமாக இருத்தல் அவசியம். விசர்நாய் கடித்தால் அன்றிலிருந்து விஷக்கிருமிகள் எமதுடலில் சென்று பல்கிப்பெருக ஆரம்பித்து விடும். ரேபிஸ் (Rabis) எனப்படும் நீர்வெறுப்பு நோயின் தாக்கம் மனிதர்களில் தாங்க முடியாதளவிற்கு இருக்கும். சாலையோரம் பராமரிப்பின்றி நின்ற நாயொன்றைப் பாதுகாக்கும் மனிதாபிமானத்துடன் அதனை தூக்கியபோது அவரது கையில் கடித்துவிட்டது. நிறைந்த விளையாட்டு வீரரான அவர் அதனை அலட்சியம் செய்துவிட்டதனால் சிறிது காலம் செல்ல ரேபிஸ் நோய் குணங்குறிகளை காட்டத் தொடங்கியிருக்கின்றது.

இந்நோய் வந்தால் காய்ச்சலும், தலையிடியும், உடற்சோர்வும் கடித்த இடத்தில் அரிப்பும், தாங்கமுடியாத ஒவ்வாமை தன்மையும் (அலர்ஜியும்) நீர்குடிப்பதை வெறுக்கும் நிலைமையும் ஏற்படும். நாள்முழுக்க பாதிக்கப்பட்டவர் ஓய்வற்று காணப்படுவார்.

நோய்முற்றிய நிலையில் உடற்பாகங்கள் செயலிழக்கத் தொடங்கி கோமா நிலைக்கு சென்றுவிடுவர். சிலநேரங்களில் நாய்கள் குலைப்பது போன்று அவர்களது வாய் செயற்படத்தொடங்கும். இனிய உறவுகளை இவ்வாறு காண்பதும் இழப்பதும் என்றுமே மிகுந்த வலியைத் தரும்.

விசர்நாய்க்கடிநோய் வந்தால் மீட்சியில்லை. விசர்நாயின் கடிக்குள்ளானால் உடனடியாக வைத்தியசாலையை நாடுவது அவசியம். கிருமி உடலுக்குள் பரவினால் பின்பு என்ன செய்தாலும் பாதிக்கப்பட்டவரை காப்பாற்ற முடியாது. மருத்துவ உலகமே கைவிரித்துவிடுமளவுக்கு இந்நோயின் வக்கிரம் இருக்கும். மேலும் தெருவோரத்தில் காணப்படும் நாய்களின் எச்சங்கள் பாதையிலும் பாதையோரங்களிலும் இருந்து காய்ந்து அவற்றில் தொற்று ஏற்படும் தூசி சிற்றுண்ணிகள் (Dust mites) பாதையில் பயணிப்பவர்களுக்கு ஒவ்வாமை மற்றும் ஆஸ்துமா நோயை ஏற்படுத்தி விடுகின்றன. பாதையில் பயணிப்பவர்கள் முகக்கவசம் அணிந்தால் இவ்வாறான நிலைமையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.



**நாம் செய்ய வேண்டியது**

விசர்நாய்களைக் கண்டால் அவை பற்றி அந்தப் பகுதி கால்நடை மருத்துவருக்கோ அல்லது கிராம சேவை அலுவலருக்கோ தெரிவித்து அதனைப் பாதுகாப்பாக அகற்ற வேண்டும். விசர்நோய் கண்ட நாய்கள் நீரை விரும்பமாட்டாதவை. அதனால் அவையும் நீரை அருந்தாமல் அவற்றின் மேல் நீரூற்றினால் வெறிகொண்டோடும். இவற்றை அவதானித்து எம்மாலான பாதுகாப்பு முயற்சிகளை எடுத்தல் அவசியம். குறிப்பாக சிறுபிள்ளைகளை இவ்வாறான நாய்கள் பாதையில் செல்லும் போது கடித்து விடுகின்றன. நோய்த்தொற்று கொண்ட நாய் ஏனைய நாய்களைக் கடித்தால் இந்த நோய்க்கிருமி அவற்றின் உடலினுள்ளும் சென்றுவிடும்.

பாதைகளில் பெருகிவரும் நாய்களை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றுக்கு மனிதாபிமானம் எனும் போர்வையில் உணவூட்டி அவற்றின் பெருக்கத்திற்கு வழிசமைக்க கூடாது. வளர்ப்புப் பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி அவசியம் ஏற்றுதல் அவசியம். வீட்டிற்குவருபவர்களை நாய்களோ பூனைகளோ நாவினால் நக்கினாலோ அல்லது கடித்தாலோ விசர்கடி நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அவசியம். இதனை நாம் நிச்சயமாக தவிர்க்க முடியும்.

நாய்கள் அதிகமாக வளர்க்கும் வீடுகளுக்கு அருகிலுள்ள வீடுகளில் வசிப்போர் மிகுந்த இடர்களைச் சந்திப்பதனை காணலாம். இரவு பூராவும் நாய்கள் ஊளையிடுவதும் குரைப்பதும் அருகிலுள்ள வீடுகளிலுள்ள வயதானவர்கள், பாடம் படிப்பவர்கள் மற்றும் நோயாளிகள் அனைவரினதும் நித்திரையை குழப்பி விடுகின்றன. இந்த விடயத்தில் நாய்களைக் கட்டிவைப்பதுடன் அவற்றின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தி முறையாகத் தடுப்பூசிகளையும் போடுதல் அவசியம்.

மேலும் தெருவோரத்தில் காணப்படும் நாய்களின் எச்சங்கள் பாதையிலும் பாதையோரங்களிலும் இருந்து காய்ந்து அவற்றில் தொற்று ஏற்படும் தூசி சிற்றுண்ணிகள் (Dust mites) பாதையில் பயணிப்பவர்களுக்கு ஒவ்வாமை மற்றும் ஆஸ்துமா நோயை ஏற்படுத்திவிடுகின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை நடைபாதையில் மலங்கழிக்க கொண்டு வந்து விடும் மேதாவிகளையும் நாம் காணலாம்.

தமது வீடு சுத்தமாகவும் பாதை எப்படியிருந்தாலும் பரவாயில்லை என இருப்பவர்களை சட்டம் தண்டிக்க வழிசெய்தல் வேண்டும். பாதையில் பயணிப்பவர்கள் முகக்கவசம் அணிந்தால் இவ்வாறான நிலைமையிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளலாம். எம்மால் தவிர்க்கக்கூடிய இவ்வாறான நோய்களை நாம் கட்டுப்படுத்தி தேவையற்ற உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ளலாம்.



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்திற்கு அநுர அரசு அடிபணிந்து வருகின்றது

## நாமல் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்திற்கு அநுர அரசாங்கம் அடிபணிந்து வருகின்றது எனப்பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் தொடர்பான விடையங்களில் கூட புலம் பெயர்ந்தோரின் அழுத்தத்திற்கு அரசாங்கம் அடிபணிந்து வருவதாகக் குற்றம் சுமத்தினார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும். வரலாற்றில் ஒவ்வொரு அரசாங்கமும் உள்மோதல்களால் சரிந்துள்ளது.

இரு கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

தனது கட்சி நீண்டகாலமாக ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இடையே ஒற்றுமையை வலியுறுத்தி வருகின்றது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல், மக்களைப் பிரிப்பதன் மூலம் நடத்தப்படக் கூடாது எனவும் வெறுப்பு இல்லாமல் இருக்க வேண்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இன்னும் தொலைவில் இருப்பதாகவும் இந்நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் நாமல் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எந்தத் திருத்தமும் இருக்காது என்று லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட், நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோகிராம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை 3 ஆயிரத்து 690 ரூபாவாகவும் 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 482 ரூபாவாகவும் இருக்கும்.

2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.694 ஆகவும் மாறாமல் உள்ளது என்று நிறுவனம் உறுதிப்படுத்தியது.

நடைமுறையிலுள்ள எரிவாயு விலை நிர்ணய பொறிமுறையின் கீழ் நிறுவனத்தின் வழக்கமான மாதாந்திர விலை மதிப்பாய்வைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

### சிறைச்சாலைத் துறையில்

# 554 அதிகாரிகளை நியமிக்க அரசு ஒப்புதல்

(கொழும்பு)

சிறைச்சாலைத் துறையிலுள்ள ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 554 அதிகாரிகளை நியமிக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

சிறைச்சாலை ஆணையர் மற்றும் ஊடகச் செய்தி தொடர்பாளர் ஜகத் வீரசிங்கவின் கூற்றுப்படி, வெற்றிடங்கள் 2025 ஆகஸ்ட் 29 அன்று அரச வர்த்தமானியில் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டன.

புதிய ஆட்சேர்ப்பில் 409 ஆண் சிறைக் காவலர்கள், 70 பெண் சிறைக் காவலர்கள், 55 தரம் II ஆண் ஜெயிலர்கள், 7 தரம் II பெண் ஜெயிலர்கள், 10 தரம் II ஆண் புனர்வாழ்வு அதிகாரிகள் மற்றும் 3 தரம் II பெண் புனர்வாழ்வு அதிகாரிகள் உள்ளனர். (ம-7)

# முன்னாள் அரசியல் கைதி அரவிந்தன் பிணையில் விடுவிப்பு

(வவுனியா)

முன்னாள் அரசியல் கைதி அரவிந்தன் கடும் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2024 மார்ச் மாதம், விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டதாகக் கூறி அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் முகநூல் பதிவு தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

முன்னதாக அவர் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் வவுனியாவில் வசித்து வந்த அவர் போராளிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பின் மூலம் செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அரசியல் கைதி அரவிந்தன், நேற்று ஐந்து இலட்சம் ரூபா இரு சரீரப் பிணையில் பயணத்தடை விதிக்கப்பட்டு பல நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-7,299)

### தெல்லியூரில் நாளை தேர்

# முதலுதவிச் சேவைகள் தயார் நிலையில்

தெல்லிப்பழை துர்க்காதேவி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தில் நாளை வியாழக்கிழமை இரதோற்சவப் பெருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ள நிலையில் இவ் உற்சவங்களில் வழமை போன்று இவ்வாண்டும் பல்லாயிரம் அடியார்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே அதனைக் கருத்தில் கொண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழை பிரிவானது துரித முதலுதவிச் சேவைகளை வழங்கும் நோக்குடன் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பிரிவின் தலைவர் நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-7)

### கலைஞனின் குரல்

# மாதாந்த பத்திரிகையின் இரண்டாம் இதழ் இன்று

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் "கலைஞனின் குரல்" மாதாந்தப் பத்திரிகையின் இரண்டாம் இதழ் வெளியீடானது இன்று புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் எல்மோ இல்லம், 2ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் பிராந்தியச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

---

கௌரவத்தைப் பெற்று விடுவது பெரிதன்று, அதற்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பதுதான் முக்கியமானது. – அரிஸ்டோட்டில்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

# எம் தமிழ் அரசியல் எதைச் சாதிக்கும்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தருவாரா? என்று யாரேனும் எம்மிடம் கேட்டால், அதற்கான எமது பதில் இல்லை என்பதுதான்.

அப்படியானால், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஆதரிக்க வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி தானாக எழுகை பெறும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதாவது இந்த நாடு ஊழல் எனும் சாக்கடைக்குள் வீழ்ந்து கிடக்கிறது.

அதர்மத்துடன் கூடிய பணக்கார வர்க்கமும் சண்டித்தனச் சமூகமும் அப்பாவி மக்களுக்குச் செய்கின்ற துரோகம் கொஞ்சமல்ல.

அதிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் செய்த ஊழல் மோசடிகள், அவர்கள் இயக்கிய பாதாள உலகக் குழுக்கள், ஊர்தோறும் இயக்கி வந்த தாதாக்கள் மற்றும் எங்கள் மண்ணில் இருக்கக்கூடிய சண்டித்தனக் குழுக்கள், மீற்றர் வட்டிக்குக் கடன் கொடுத்து அப்பாவி மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கின்ற தரப்புகள் இதைவிட அடாவடித்தனம், ஏமாற்று வேலைகள், போதை வஸ்து வியாபாரம் என ஏகப்பட்ட கொடுமைகளுக்குள்ளும் அநியாயங்களுக்குள்ளும் அகப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்கள் எதுவும் செய்ய முடியாமல் அல்லாடுகின்றனர்.

இதுமட்டும்தானா என்றால் இல்லை. அரச நிர்வாகத்தில் இடம்பெறும் ஊழல்கள், ஏழை மக்களுக்கு சேவை வழங்க மறுக்கின்ற அரச உத்தியோகத்தர்கள், இலஞ்சம் வாங்குவதை இலக்காகக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்க மறுக்கின்ற அரச சேவையாளர்கள் இன்னும் தங்களின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்ற பாலியல் துன்புறுத்தல்கள் என தினசரி நடந்தாகின்ற அக்கிரமங்களுக்கு முடிவு கட்டியேயாக வேண்டும்.

இந்த அக்கிரமக்காரர்கள் தண்டிக்கப்படும் போது அல்லது தண்டனை கிடைக்கும் என்றுணர்ந்து அவர்களே தாமாகத் திருந்தும்போது, நாட்டில் நற்பிரஜைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இவ்வாறு நற்பிரஜைகள் பெருகும்போது சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்ற இனவாதிகளின் நோக்கமும் அவர்களின் பிரசாரமும் தவிடுபொடியாகிவிடும்.

ஆக ஊழல் ஒழிப்பு, தூய்மையான அரச சேவை, இனம் – மதம் சார்ந்த துவேசங்களை அறவே இல்லாது செய்தல், அரசியலமைப்பின் ஊடாக அனைவருக்கும் சம உரிமை என்ற உயரிய சிந்தனைகளைச் செயற்படுத்தத் துடிக்கின்ற ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு உதவுவதும் அந்த ஆட்சித் தலைவனை வலுப்படுத்துவதும் கட்டாயமானது.

அந்த அடிப்படையில், நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நல்ல திட்டங்களை ஆரம்பித்து வைத்தபோது, எங்கள் தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த இடத்தில் பிரசன்னமாகி இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் யாரேனும் அங்கு வருகை தரவில்லை எனும்போது, நம் தமிழ் அரசியல் எதைத்தான் சாதிக்கப் போகிறது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச் ...

உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) குறித்த கவலைகள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் இச்சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்த போதிலும் இதன் கீழ் தனி நபர்களைக் கைது செய்து நீண்ட காலம் தடுத்து வைப்பது தொடர்கிறது என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்தி, அதை இரத்துச் செய்யவோ அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க புதிய வரைவுச் சட்டத்தை அறிமுகப்படுத்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர்ஸ்தானிகர் பரிந்துரைத்துள்ளார்.

மேலும், இச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து சந்தேக நபர்களையும் விடுவிக்கவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம், அமைதியான ஒன்றுகூடல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை தேவையற்ற முறையில் கட்டுப்படுத்தும் சட்டங்களை இரத்துச் செய்யவோ அல்லது திருத்தவோ உயர்ஸ்தானிகர் பரிந்துரைத்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 16வது அமர்வு 2025 செப்ரெம்பர் 8 முதல் ஒக்டோபர் 3 வரை நடைபெறவுள்ளது. இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வமர்வில் பங்கேற்கவுள்ளார். (ம-7)

## இனப்பிரச்...

தோல்வியடைந்த அரசியல் வாதிகளே இனவாதத்தைக் கையில் எடுப்பதாகவும் இனப்பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு எல்லைக்கும் தாம் செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தாம் ஒருபோதும் இனவாத அரசியலுக்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் குறிக்கோளுடனேயே தாம் செயற்பட்டு வருவதாகவும் பழைய இனவாத கோஷங்களுக்கு எதிரான முற்போக்கான செயற்பாடுகளை தாம் ஒரு போதும் பின்னோக்கி நகர்த்தப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இங்குள்ள மக்களின் வாழ்வில் பெரும் பகுதி போரிலே கழிந்துவிட்டது.

ஒருவரையொருவர் நம்பாமல், சந்தேகப்பட்டு ஆயுதம் ஏந்திமுப்பது வருடங்கள் போராடினார்கள்.

அது நம் நாட்டில் நடந்த ஒரு பாரிய துயரம் ஆகும். இது நம் நாட்டு மக்களை அந்நியப் படுத்தியது. இனவெறி அரசியல் தோன்ற வழிவகுத்தது.

ஒற்றுமையை உருவாக்குவதே எமது அரசாங்கத்தின் குறிக்கோள். அதற்காக எடுக்கக் கூடிய, சர்ச்சைக்கு உள்ளாகும் முடிவுகளை எடுப்பதற்கும் நாங்கள் சிறிதும் அஞ்சமாட்டோம் என்றார். (ம-7)

## பதுளையில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

பதுளை- பல்லேகெட்டுவ பொலிஸ் தோட்டப் பகுதியில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் அடையாளம் காணமுடியாதளவுக்கு எரிந்திருப்பதனால் உயிரிழந்தவர் யார் என அடையாளப்படுத்த முடியவில்லை.

உயிரிழந்தவரின் சடலம் பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## உண்மையைக்...

உலக தெங்கு தினத்தை முன்னிட்டு, புதுக்குடியிருப்பு நகரில் நேற்றுக் காலை நடைபெற்ற "நாடே சுபீட்சம் - ஆக்கும் விருட்சம் - கற்பகத்தரு வளம்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற வடக்கு தெங்கு முக்கோண துவக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து ஒரு அடியை முன்னால் வைத்த அந்த மக்களை வெற்றியின் பக்கம் அழைத்துச் செல்லவுள்ளேன்.

வடக்கிற்குப் புதிய பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்க எதிர்காலத்தில் தொழிற்துறை வலயங்கள் உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்துவேன்.

வடக்கு மக்களின் காணி உரிமைகள், மொழி மற்றும் கலாச்சார உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமையைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் தேவையான முடிவுகள் தயக்கமின்றி எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7)


# INVITATION FOR BIDS (IFB) - 2025
# KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1.The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2.Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )
4.Qualification requirements are indicated in section -5 ( Schedule) of the Bidding document.
5.Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee,Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690, E-Mail:** kilinochchi1kps@gmail.com) and inspect the bidding documents at the address given below **from 03.09.2025 until 17.09.2025 During 9.00 am to 3.00 pm** on Normal Working Days.
6.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee, karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi,** from **03.09.2025 until 16.09.2025 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be **by cash.**
7.Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee** ( Div PC) **Karachchi Pradeshiya sabha, A9 Road, Kilinochchi** on or before **10.00 am** on **17th September 2025** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8.All bids shall be accompanied by a "*Bid-Security*, as in the table below.
9.The pre-bid meeting will be held on **10.09.2025** at **03.00 pm** at the **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**TABLE**

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2025.09.03 – 2025.09.16** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2025.09.10** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2025.09.17** |

| S.No | BID No. | Name of the Work | Source of Funds | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICTAD Grade Required (Highways,Buildings) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Valid up to | | | | |
| 1 | NP/KN/KPS/2025/ PU-03/ C.W 04 | CONSTRUCTION OF PUIYAMPOKKANAI NAGATHAMPIRAN KOVIL ROAD | Council | 4.237 | 64,000.00 | **03.12.2025** | C8 or Above (Highways) | 05.11.2025 | 90 Days | 2,000.00 |
| 2 | NP/KN/KPS/2025/ PSDG-06 | RE CONSTRUCTION OF 1ST LANE OF KUMARAPURAM MAIN ROAD– STAGE II | PSDG | 5.529 | 83,000.00 | **31.12.2025** | C8 or Above (Highways) | 03.12.2025 | 56 Days | 2500.00 |

The address referred to above is (are)

**Chairman,**
**Divisional Procurement Committee(DivPC),**
**Karachchi Pradeshiya sabha.** (C-3792) 03.09.2025





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுவாகல்...

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாவதனை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வடக்குக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்நிலையில் நேற்று நண்பகல் 1.00 மணியளவில் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

மிகநீண்டகால கோரிக்கையாக இருந்த வட்டுவாகல் பால நிர்வாகப் பணிகளை ஆரம்பிக்க வந்த ஜனாதிபதியை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் வரவேற்றிருந்தார்.

தொடர்ந்து பால நிர்மாணப் பணிக்கான பெயர்ப்பலகையை ஜனாதிபதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான திலகநாதன், ஜெகதீஸ்வரன், ரவிகரன், மதகுருமார்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், தவிசாளர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## சிறிய, பெரிய...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் 41ஆவது நாள் அகழ்வு யாழ்.மாவட்ட மேலதிக நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது பெரிய எலும்புக்கூட்டுத் தொகுதியின் தோள் பட்டையுடன் தொடுகையுற்றவாறு ஒப்பீட்டளவில் சிறிய எலும்புக் கூட்டுத்தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த எலும்புக் கூடுகளைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அவை இன்று முற்றாக அகழ்ந்தெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது மூன்று சந்தர்ப்பங்களில் ஒன்றன் மேல் ஒன்றாக 06 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் இரு எலும்புக் கூட்டுத் தொகுதிகள் ஒன்றுடன் ஒன்று தொடுகையுற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மேலும் 4...

எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் 41ஆவது நாள் அகழ்வுப் பணி நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதவான் எஸ்.லெனின்குமார் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 4 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே இனங்காணப்பட்ட 8 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 08 எலும்புக் கூட்டுத் தொகுதியுடன் இதுவரையில் 206 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரையில் 222 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## இனவாத அரசி...

அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் "நாடே சுபீட்சமாக்கும் விருட்சம் கற்பகத்தரு வளம் உலக தெங்கு தினக் கொண்டாட்டம் 2025" நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இனவாத அரசியல் ஒருபோதும் பொதுமக்களுக்குச் சேவை செய்ததில்லை என்றும் இனவாதம் அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக மட்டுமே இருந்து வருகிறது.

அத்தகைய இனவாத அரசியல் எந்த வடிவத்திலோ அல்லது இடத்திலோ எழுந்தால், மக்கள் அதை நிராகரிப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

30 ஆண்டுகால யுத்தம் நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய சோகம் என்றும் அதன் விளைவாக, அது மக்களிடையே பிளவுபட வழிவகுத்தது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## முன்னாள் கடற்...

பிரித்தானிய சந்தையில் இருந்து நீக்கியுள்ளது.

சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்காக பிரித்தானியாவால் தடை விதிக்கப்பட்ட ஒருவரின் வெளியீட்டை விற்பனை செய்வது பிரித்தானிய சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளதாக சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்திட்டம் (ITJP) எச்சரித்ததை அடுத்து, கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொடவின் 'The Turning Point: The Naval Role in Sri Lanka's War on LTTE Terrorism' விற்பனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படைத் தளபதியாக இருந்த போது, 2008-2009 கால கட்டத்தில் கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இளைஞர்கள் உட்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வசந்த கரன்னாகொட முக்கிய சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த திருகோணமலையில் உள்ள கன்சைட் நிலக்கீழ் வதை முகாம், கொழும்பு சைத்திய வீதியில் அமைந்திருந்த "பிட்டு பம்புவ" தடுப்பு முகாம் ஆகியவை அப்போதைய கடற்படைத் தளபதியாக இருந்த வசந்த கரன்னாகொடவிற்கு தெரிந்தே கடற்படையின் விசேட புலனாய்வுப் பிரிவால் நடத்தப்பட்டதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 5940
R 8 9 7 3 7 1
அத சம்பத
R 7 3 7 1
சீட்டிழுப்பு இலக்கம் 0515
National Lotteries Board

சுப தவசக்
2025.09.02
0656
துலாம் 05 06 19 36

தன நிதானய
திகதி - 2025.09.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1970
E 47 59 66 76 E

மெகா பவர்
திகதி 02/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2288
R 25 22 47 59 78

ஜய
திகதி 2025.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 0208
F 2 2 6 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4182
சீட்டிழுப்பு திகதி 02.09.2025
E 01 58 62 74
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 1249
விருச்சிகம் 01 05 30 32 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.09.2025 வெற்றி வாரம் 0648
P 8 1 0 8 1 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23.363.730.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2914
சீட்டிழுப்பு திகதி 2025.09.02 தினம் செவ்வாய்க்கிழமை
23 28 34 57 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,676,364.80

சனிதா
திகதி 02.09.2025 வெற்றி வாரம் 5075
31 38 45 50 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,991,973.20

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 0761
சீட்டிழுப்பு திகதி 02.09.2025
செவ்வாய்க்கிழமை
27 45 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4626
சீட்டிழுப்பு திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
01 06 40 45 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,158,855.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 10 25 47 60 74
2090
02.09.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.591,567,119.80

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2740
சீட்டிழுப்பு திகதி: 2025.09.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,501,622.40
13 14 19 76 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NORTHERN UNI | University of Bedfordshire | SCU SLIIT CITY UNI

## TOP-UP YOUR HND/ ADVANCED DIPLOMA

SEPTEMBER INTAKE 2025

DURATION 1 YEAR
Convenient schedule for working professionals

With a world renowned British Degree from University of Bedfordshire, UK

International Programmes
Top Up, (University of Bedfordshire- UK)
- B.Sc (Hons) Artificial Intelligence & Robotics
- B.Sc (Hons) Cybersecurity
- B.Sc (Hons) Computer Science
- B.Sc (Hons) Software Engineering
- B.Sc (Hons) Computer Networking

SRI LANKA U.G.C. RECOGNIZED

10th in the UK For Education

(C-3787)

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

021 7534 807
northernuni.lk apply@northernuni.com

## SB TRAVELS AND TOURS PVT LTD

சகல நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களை குறைந்த விலையிலும் யாழ்ப்பாணம், கொழும்பிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல Rs.37,900 மற்றும் கனடா Return Ticket Rs.398,000 இருந்தும், இந்தியா விசாக்களும் செய்து தரப்படும். (C-3790)

யாழ்ப்பாணம் : 021 2228 555, 076 691 1082
கொழும்பு : 011 244 6666, 077 108 3480
இணையத்தளம் : www.sbtravels.lk (Conditions apply)

## வேலையாட்கள் தேவை

♦ முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)
- 25 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- ஓய்வுபெற்றவர்கள் (தனியாள்) விண்ணப்பிக்கலாம்
- யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை

பொது முகாமையாளர்,
வலம்புரி பத்திரிகை,
இல.191,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 097 3121

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Recovery Officer | : 0764869146 |
| Gold Loan Officer | : 0764800894 |
| Waiter | : 0774078235 |
| Banner Machine Operator (Vavuniya) | : 0777166601 |
| Graphic Designer | : 0776216741 |
| Decoration Helpers | : 0777750318 |
| விற்பனையாளர் | : 0775503314 |
| Montessori Teacher | : 0777009653 |
| House Keeping(Girls) | : 0760770373 |
| Packing | : 0774195209 |
| Baber | : +4747977777 |
| Waiter (Kilinochchi) | : 0777111831 |
| Sales Assistant | : 0752217661 |
| Assistant Manager | : 0772019313 |
| Pharmacist(Kilinochchi) | : 0769835289 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
0760984532 (5313)

DEWMAS, 51, Amman Road, Nallur

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3794)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (5311)

நேரடி தொடர்புகளுக்கு :
074 153 1379

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் 3 ½ பரப்புக் காணி சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தேவையில்லை நேரடியாக தொடர்பு கொள்ளவும்)

077 810 3373 (5318)

## காணி விற்பனைக்கு

காரைநகர் வீதி, மூளாய் வைத்தியசாலைக்கு அண்மையில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

தொடர்புகளுக்கு :
077 161 1853
077 043 9822 (5312)


## பத்திரிகையாளராக மாறுவேடமிட்டு படுகொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

"ஹரக் கட்டா" என்று அழைக்கப்படும் நடுன் சிந்தகவை பத்திரிகையாளராக மாறுவேடமிட்டு படுகொலை செய்ய முயற்சித்த "பெக்கோ சமன்" இன் அடியாள் ஒருவரை மஹரகம வில் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாண குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (02) இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணைகளில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒரு அரச நிறுவனத்தில் பணியாற்றுபவர் என்பதும் பாதாள உலகக் தலைவர் கெஹெல் பத்தர பத்மேவின் ஆணைக்கு அமைய இந்த தாக்குதலை திட்டமிட்டிருந்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

அந்த நபர் கைது செய்யப்பட்ட சமயத்தில் பொலிஸார் ஒரு கைத்துப்பாக்கி மற்றும் சேதமடைந்த வீடியோ கமரா ஒன்றை கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர், "ஹரக் கட்டா" காவலில் வைக்கப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்திற்குள் பத்திரிகையாளர் போல் ஊடுருவி தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 2025.09.01 தொடக்கம்இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS) பதவியுயர்வு பெற்றுச் செல்லும்

திரு.சுப்பிரமணியம் புஸ்பரங்கன் (SLPS-2)

அவர்கள் மேலும் பல பதவியுயர்வுகளையும் சிறப்புக்களையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் 2017 இல் இருந்து 2024 வரை அதிபருடன் இணைந்து பணியாற்றிய ஆசிரியர்கள் (C-3796)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி தெல்லிப்பளைச் சந்திக்கு அண்மையில் 8 ½ பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
077 161 1853
077 043 9822 (5312)

## மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

077 191 7936 (1511)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை குருநாதர்சுவாமி கோவிலை அண்மித்த பகுதியில் 24 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
077 161 1853
077 043 9822 (5312)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3793)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org